RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s714

OPEN ACCESS

# ‘மாணிக்கம்’ புதினத்தில் பெண்ணியச் சிக்கல்கள்

மா. பத்மா [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீ ஆதி சுஞ்சனகிரி மகளிர் கல்லூரி, கம்பம்-625516, தமிழ்நாடு, இந்தியா.

# Feminist Issues in the Novel ‘Maanickam’

M. Pathma [a, *]

[a] Department of Tamil, Sri Adi Chunchanagiri Women's College, Cumbum-625516, Tamil Nadu, India

* Corresponding Author: pathma.muthu.567@gmail.com

Received: 28-12-2021
Revised: 17-04-2022
Accepted: 09-05-2022
Published: 13-07-2022

## ABSTRACT

The basic principle of feminism is that women should have equal rights with men, regardless of gender, at all levels of society. The idea that feminism is the opposition to men is prevalent in society. In fact, the main purpose of feminism is to liberate women who have been enslaved, tortured, and oppressed over time and to give them equal value in society. Feminism includes all the various sufferings, problems, and solutions that a woman faces in her life, from birth to death. The word ‘feminism’ may be used to mean that a woman is equal to a man in every aspect. From that day to this day, women, though mostly respected in society, are sometimes thrown into the dust by social circumstances. Women are lagging behind in education, employment, the economy, etc. Every author, with the goal of improving women's society, addresses women-oriented social and community-based issues in their novels. On that basis that all women in the community must progress and live with vigilance, through her novel 'Manickam', S.Tamilselvi has exposed the social problems in the lives of women, the problems caused by the husband's suspicion, the problems in getting an education; and the problems faced by women because of other women. In addition, she has raised awareness about how women should recover from such issues. Furthermore, in her work, she has created feminine characters by perpetuating many concepts that are unique and stable for women, such as chastity, love, marriage, education, and poverty.

**Keywords:** Maanickam, Feminism, Society, Feminist Issues

## முன்னுரை

பெண் என்பவள் மனித இனத்தின் புனிதமாக, தெய்வமாக, உயிராக, ஒளியாக மதிக்கப்படுபவள். இதனை,

‘உயிரைக் காக்கும் உயிரினைச் சேர்ந்திடும்

உயிரினுக்குயிராய் இன்பம் ஆகிடும்

உயிரினும் இந்தப் பெண்மை இனிதடா’

என்கிறார் பாரதியார் (Bharathiar, 2008). மனித வாழ்வின் அடித்தளம் பெண். சமய அடிப்படையில் சக்தியின் அம்சமாகவே பெண்ணைப் பாராட்டினர். சக்தியின்றி சிவன் இயங்காது எனப் பெண்மைக்கு உயர்வு தந்தனர். இத்தன்மை வாய்ந்த பெண்கள் இடைக்காலத்தில் ஆண் மக்களால் அடிமைகளாகக் கருதப்பட்டனர். ஆண், பெண் இணைந்த வாழ்க்கையில் ஆணை உயர்வாகவும், பெண்ணைத்

தாழ்வாகவும் மதிக்கின்ற நிலை தொடர்ந்து சமூகத்தில் இருந்து வருகிறது. பெண்ணை அடுப்பூதும் பெண்ணாகப் பாவித்த காலத்தில் அவளுக்குப் பேச்சுரிமை மறுக்கப்பட்டது. இதனால் சுயமாகச் சிந்திக்கவும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் வழியின்றி வெளி உலகம் அறியாமல் 'அடுப்படியே திருப்பதி'. ஆம்படையானே குலதெய்வம்' என வாழ்ந்தாள். பெண்ணின்பால் பெண்மை, தாய்மை, இறைமை என்னும் மூன்று நீர்மைகள் விளங்குவதை எடுத்துக்காட்டிப் 'பெண்ணின் பெருமை' பேசினார் திரு.வி.க. 'துறைதோறும் துறைதோறும் துடித்தெழுந்து தொண்டு செய்வாய்' என்று தூண்டினார் பாரதிதாசன். இவ் அறிஞர்கள் பாடியதற்கேற்ப, இன்று பெண்கள் தொடாத துறை இல்லை. செய்யாத வேலை இல்லை என்னும் அளவிற்கு முன்னேறி வருகின்றனர்.

காலங்காலமாக நசுக்கப்பட்டு வரும் பெண்கள், இன்று சுயமாகச் சிந்திக்கவும், சமுதாயத்தில் தன்னையும், தன்னைச் சார்ந்த குடும்பத்தின் நிலையை உயர்த்தவும் துணிந்து செயல்படுகின்றனர். எனினும், இன்றும் பெண்களின் நிலை முற்றிலுமாக மாறி விடவில்லை. பெண்களின் வாழ்க்கை, சிக்கல் நிறைந்ததாகவும், போராட்டங்கள் மிகுந்ததாகவும் காணப்படுகிறது. அவை பற்றிப் பல இடங்களில் பலரால் பேசப்பட்டும், எழுதப்பட்டும் வருகின்ற இன்றைய நிலையில் பெண் எழுத்தாளர் சு. தமிழ்ச்செல்வி அவர்களின் முதல் படைப்பான 'மாணிக்கம்' புதினத்தில் பெண்ணியச் சிக்கல்களை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## வாழ்க்கை

மனிதனின் பிறப்பு, இறப்பு இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட காலம் தான் வாழ்க்கை. சமுதாயச் சூழ்நிலையில் மனிதன் தனக்குப் பிடித்தமான வாழ்க்கையை முழுமையாக வாழ்வதில்லை. பாதி வாழ்க்கை பிறருக்காக வாழ்கிறான். அதிலும் பெண்கள் பிறரைச் சார்ந்தும், அடுத்தவர்களின் உணர்வுக்கு மதிப்பளித்தும், தனக்காக வாழாமல் இருக்கின்ற சூழலே மிகுதியாக உள்ளது. இல்லற வாழ்வில் ஈடுபடும் பெண் அன்பானவள், அடக்கமானவள், அதிகாரத்தின் முன் அடங்கிப் போகிறவள், தேனீயாய் குடும்பத்திற்கு உழைப்பவள். இல்வாழ்வில் ஈடுபடும் பெண்களின் வாழ்க்கையைப் பற்றி,

'இல்வாழ்க்கை என்னும் செடியை அன்பின்றித் தொடாதே! வாடிவிடும். சந்தேகத்தோடு முகராதே! உதிர்ந்து விடும். இச்செடியை மனப்பூர்வமான இன்சொல், குழைவு, திடநம்பிக்கை என்னும் தண்ணீரால் வார்த்தால் எந்தப் பருவத்திலும், கிழடு தட்டிய பிறகும் இதன் நறுமணம் தென்றலாக நம் இதயத்தில் தவழ்ந்து செல்லும்' என்பார் (Kulasekaran, 1984). வாழ்வியலில் பெண் அன்பிற்கு மட்டுமே கட்டுப்பட்டவள். அதிகாரத்திற்கு அல்ல என்பது இவரின் கருத்து.

## சமூகத்தில் பெண்ணின் வாழ்க்கை

சமுதாயத்தில் பெண் அடிமையாகக் கருதப்பட்ட நிலை இன்றும் நீடிக்கிறது. பெண்ணுக்குக் கல்வி உரிமை, ஆண் பெண் சம உரிமை கொடுக்கப்பட்டதாகக் கூறினாலும், முழுமையான உரிமை வழங்கப்படவில்லை. சமுதாயத்தில் ஆண் தனித்து வாழ்வதற்கு உரிமை இருக்கிறது. பெண் தனித்து வாழ்ந்தாலோ, வாழ நினைத்தாலோ அவளுக்குப் பாதுகாப்பு இல்லை. சமூகம் அவளைத் தவறாகப் பேசுகிறது. ஆணின் அதிகாரத்திற்கு உட்பட்டே பெண் வாழவேண்டும் எனச் சமூகம் நிர்பந்திக்கிறது. பெண்ணின் விருப்பம், சுயமாகச் சிந்திக்கும் திறனுக்கு முட்டுக்கட்டையாகவே சமூகமும், ஆண்களும் இருந்து வருகின்றனர். இன்றைய காலகட்டத்தில் சமூகத்தில் பெண்ணைப் பற்றிய வரையறையாக 'இலக்கியமாகட்டும், சமூகமாகட்டும், ஏன் நடைமுறை வாழ்க்கையாகட்டும், பெண் என்பவள் தாயாகவும், தெய்வமாகவும் போற்றியும் உயர்த்தியும் வழிபட்ட நிலையில் மென்மையானவள், உண்மையானவள், பெருந்தன்மையானவள், பயன்பாடுடையவள், பொறுமைக்கு உறைவிடமானவள், அழகானவள், பிறர்நலம் உடையவள் எனப் பலவாறாக சித்தரிக்கப்படுவது ஒருநிலை. இந்நிலைக்கு மாறாக, போகப்பொருளாகவும், சடப்பொருளாகவும் நசுக்கப்பட்ட நிலையில் வக்கிரமானவள், தன்னலம் உடையவள், சிந்திக்கத் தெரியாதவள், பலமில்லாதவள்' என்ற கருத்துருவாக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன (Paramasivam, 1999).

## கல்வி நிலை

பெண்களுக்குக் கல்வி கூடாது என்ற மறுப்பு இலக்கியங்களில் இல்லை. சங்க இலக்கியங்களில் வரும் பெண்பாற் புலவர்களாகிய வெள்ளிவீதியார், ஔவையார் போன்ற பெண்கள் கல்வி கற்று, சுயச் சார்பாகச் சிந்தித்தவர்கள். இன்று இவர்களின் பெயர்கள் கல்விச் சாலைகளுக்குச் சூட்டப்பட்டுள்ளன. இது தமிழக அரசு இவர்களுக்குச் செய்த மரியாதை ஆகும்.

பெண்களின் அடிமை நிலைக்கு முதன்மை காரணமாக இருப்பது கல்வியின்மையே

‘மாணிக்கம்’ புதினத்தில், மாணிக்கம் தனக்கென்று இருந்த ஒரே சொத்தான தென்னந்தோப்பை விற்று தன் ஆண்மகனாகிய நாஞ்சியைப் படிக்க வைத்தான். அதே நேரத்தில் தன் குடும்ப வருமானத்திற்காக, நன்றாகப் படித்துக் கொண்டிருக்கும் பெண்பிள்ளையான மணியின் படிப்பைப் பாதியிலேயே நிறுத்திவிட்டான் என்பதை,

“மதகடியை அடுத்து இருந்த மனையில் ஒரு கொட்டகை போட்டு நூறு ரூபாய்க்கு வெற்றிலை, பாக்கு, தீப்பெட்டி, சுருட்டு, பீடி என்ற சில்லறைப் பொருட்களை வாங்கி வந்து வைத்தான். பள்ளிக்கூடம் போய்க்கொண்டிருந்த மணியின் படிப்பைப் பாதியிலேயே நிறுத்திவிட்டு கடையில் உட்கார வைத்துவிட்டான்” என்று கூறும் இப்புதின ஆசிரியர், பெண்கல்வி இன்றளவும் முக்கியத்துவம் பெறாமல் இருக்கும் நிலையை சுட்டிக்காட்டியுள்ளார் (Tamilselvi, 2005).

## கணவனின் சந்தேகம்

திருமணம் என்கிற பந்தத்தால் ஒரு ஆணும் பெண்ணும் இணைக்கப்படுகின்றனர். இத்தகைய திருமண பந்தத்தினால் இணைந்த இருவரும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டும், விட்டுக்கொடுத்தும், அன்பு செலுத்தியும் வாழவேண்டும். அத்தகைய அன்புமிகு திருமண வாழ்க்கையில் சந்தேகம் என்னும் கொடிய விஷம் கலந்து விடுவதால் வாழ்க்கை நரகமாகிவிடுகிறது. ‘ஒரு பாதியாய் ஆணும் மற்றொரு பாதியாய் பெண்ணும் ஒன்றுபடுவது திருமணம்’ (Kalyanasundaram, 1970).

கணவன் தன் மனைவியை எந்த அளவுக்கு நேசிக்கிறானோ, அந்த அளவிற்கு மனைவி மீது நம்பிக்கை உடையவனாக இருக்க வேண்டும். ஒரு பெண்ணிற்குக் கணவனிடமிருந்து நம்பிக்கையும், அன்பும் நிரம்பக் கிடைக்க வேண்டும். ‘மனைவி ஒரு வீணை அல்ல. வாசித்து முடிந்த பிறகு அதை சுவரில் உங்கள் விருப்பப்படி சாய்த்து வைத்துவிட முடியாது’ என்கிறது ரஷ்யப் பழமொழி. ஏனெனில் மனைவிக்கு என்று சில ஆசைகள் இருக்கும். அவற்றை யாரும் கண்டுகொள்வதில்லை. அவளது உளக்கருத்துக்களுக்கு யாரும் முக்கியத்துவம் அளிப்பதில்லை.

‘மாணிக்கம்’ புதினத்தில் கதைத்தலைவன் மாணிக்கம் தன் பெற்றோரின் பேச்சைக் கேட்டுக்கொண்டு தன் மனைவி செல்லாயியைச் சந்தேகப்பட்டுப் பேசுவதும், அடிப்பதும் ஆணாதிக்கத்தின் வெளிப்பாடாக உள்ளது.

“‘தொட்டு தாலி கட்டுனவனுக்கு துரோகம் பண்ணுற நீயெல்லாம் இருந்தான்ன.... செத்தான்ன....சாவுடி சாவு’ தலைமுடியைக் கொத்தாய் பிடித்துத் தூக்கி இரண்டு கன்னங்களிலும் ஓங்கி ஓங்கி அறைந்தான். கண்களிரண்டும் தெரித்து எங்கோ கோய் விழுந்தது போலிருந்தன. அதற்குமேல் அழுவதற்குக்கூட அவளிடம் தெம்பில்லாமல் போனது. தரதரவென முடியைப் பிடித்து இழுத்து வந்து வெளியே போட்டான்.

‘நாயே! வூட்டுக்குள்ளே வந்த...கையக்கால வெட்டி, வைக்கப்போருக்குள்ள போட்டு கொளுத்திப்புடுவேன்’” என்ற நிகழ்வும், மற்றொரு நாள், வீட்டிற்குள் அவளைத் தள்ளிவிட்டு வீட்டுக்கு நெருப்பு வைத்த நிகழ்வும் ஆண்வர்க்கத்தின் உச்சக்கட்ட ஆதிக்க மனப்பான்மையை வெளிப்படுத்துவதாக இப்புதினத்தில் ஆசிரியர் காட்டியுள்ளார் (Tamilselvi, 2005).

## பெண்களுக்கு எதிரி பெண்களே

ஆண்களால் பெண்கள் ஆண்டாண்டு காலமாகப் பாதிக்கப்படுவதைப் போன்றே மாமியார், நாத்தனார் என்ற பெண் உறவுகளாலும் பெண்கள் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றனர்.

## மாமியார் கொடுமை

'மாணிக்கம்' புதினத்தில் நான்கு மாத கர்ப்பிணியாக இருக்கும் செல்லாயியை, அவளது மாமியார் தங்கத்தாச்சி தன் மகள் விரும்பிக் கேட்கும் கேழ்வரகு புட்டு செய்து கொடுப்பதற்காக, ஒரு மரக்கால் கேழ்வரகு எடுத்துக் கொடுத்து அரைக்கச் சொல்கிறாள். செல்லாயியும் மாவை அரைத்து மாமியாரிடம் கொடுக்கிறாள். மாவை வாங்கி வைத்த மாமியார், செல்லாயி மாவைத் தின்றிருப்பாளோ என்று சந்தேகம் கொள்கிறாள்.

"'உள்ளே போயி ஒரு தம்ளாரு தண்ணி மோந்துகிட்டு வா' என்றாள். குடிக்க கேட்கிறாள் என நினைத்த செல்லாயி ஒரு டம்ளரில் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள்.

டம்ளரை வாங்காமல் 'வெளியே எடுத்துக்கிட்டுப் போ' என்றாள். செல்லாயிக்கு ஒன்றும் புரியவில்லை கையில் தண்ணீருடன் வீட்டு முற்றத்துக்கு வந்தாள். பின்னாலேயே மாமியாரும் நாத்தனாரும் வந்தார்கள். விளக்குமாற்றால் மேலிருந்த மண்ணைக் கூட்டிவிட்டு,

'ம்… இந்த கொட்டாந்தரயில கொப்புளிச்சித் துப்பு' என்றாள் தங்கத்தாச்சி.

எதற்கு என்று தெரியாமலே கொப்பளித்துத் துப்பினாள் செல்லாயி.

அவள் துப்பியதை குனிந்து பார்த்தாள். தங்கத்தாச்சியின் உதட்டில் சிறிய புன்னகை நெளிந்தது.

'மாவ அள்ளித் திண்ணுருக்குறியான்னு பாத்தன். அரய்க்கிற மாவ அள்ளித் தின்னாக்க புட்டும் பெருவாது, கூழும் பெருவாது அதான்' என்றாள்.

'ச்சீ… நீயும் ஒரு பொம்புளையா?' என நினைத்துக் கொண்டாள் செல்லாயி" என்ற நிகழ்வையும் (Tamilselvi, 2005),

செல்லாயிக்கு ஐந்து மாதமானதும் 'அஞ்சு மாத்த மருந்து' கொடுக்க கோயில் தாழ்விலிருந்து செல்லாயியின் அக்கா சரசு, அவள் கணவன், ஆத்தா, பக்கத்துவீட்டுப் பெண்கள் என்று மொத்தம் ஐந்து பேர் வந்திருந்தார்கள். எல்லோரும் சாப்பிட்டு முடித்ததும் செல்லாயியைக் காப்பி போடச் சொன்னாள் தங்கத்தாச்சி.

"காப்பி போட்டு பெரிய சொம்பில் வடிகட்டி நடுவீட்டில் வைத்துவிட்டு மாமியாரிடம் வந்து சொன்னாள் செல்லாயி. இருந்த காப்பியெல்லாம் ஆளுக்கொரு டம்ளராய் ஊற்றிக் கொடுத்தாள் தங்கத்தாச்சி. தானும் ஒரு டம்ளர் குடித்தாள். எல்லோரும் குடித்து முடித்தபின் காப்பி டம்ளர்களை எல்லாம் ஒரேயிடத்தில் பொறுக்கிக் கொண்டு வந்து வைத்தாள். அரை டம்ளர் தண்ணிரை ஊற்றி ஒவ்வொரு டம்ளராய் கழுவினாள். டம்ளர்களைக் கழுவிய தண்ணீர் காப்பி போலவே கொழகொழப்பாயிருந்தது. அதனுடன் நல்ல காப்பி கொஞ்சம் ஊற்றி செல்லாயியைக் கூப்பிட்டு 'இந்தாக்குடி' என்று கொடுத்தாள். தங்கத்தாச்சி செய்வதையெல்லாம் அவளுக்குத் தெரியாமலே கவனித்துக் கொண்டிருந்தாள் சரசு. அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. 'நீயெல்லாம் ஒரு பொம்புளையா? ஓம் பொண்ணாயிருந்தா இப்புடி எச்சித் தம்ளாரைக் கழுவி வூத்திக் குடுப்பியா. புள்ளத்தாச்சி பொண்ணு மேல ஈவு எரக்கம் இல்லாத நீயெல்லாம்; ஒரு செம்மமா?'

ஆத்திரம் தீரப் பேசினாள். செல்லாயியை அந்தக் காப்பியைக் குடிக்கவிடவில்லை. டம்ளரை பிடிங்கி வந்து காட்டி… தங்கத்தாச்சியின் குணத்தை எல்லார் முன்னாலும் அம்பலமாக்கினாள். மாணிக்கத்தின் முன் டம்ளரை வைத்தாள். 'இந்தக் காப்பியப் பாருங்க. இத நீங்க குடிப்பியளா…? இல்ல ஒங்க அம்மா தான் குடிப்பாவொளா, இப்புடி பண்றாவொளே ஒங்கம்மா… அதயெல்லாம் என்னனுகொட கேக்காம குத்துக்கல்லாட்டம் ஒக்காந்திருக்குறியளே… ஒங்கள நம்பித்தான பொண்ணக் குடுத்தோம்…'

செல்லாயி பற்றி தன் நெஞ்சிலிருந்த வேதனைகளை எல்லாம் கொட்டித் தீர்த்தாள் சரசு” என்ற நிகழ்வையும் மாமியார் கொடுமைக்கு எடுத்துக்காட்டாகக் கூறியிருக்கிறார் (Tamilselvi, 2005).

## மருமகள் கொடுமை

மாமியார் கொடுமையை எடுத்துக்காட்டிய ஆசிரியர் மருமகள் கொடுமையையும் எடுத்துக்காட்டத் தவறவில்லை.

‘மாணிக்கம்’ புதினத்தில் “பெரமனின் பொண்டாட்டி அவள் அம்மாவைக் கடைசி காலத்தில் பாடாய்படுத்தி வைத்தாள். மாமியாரை மருமகளே கண்ணுக்குள் துரும்பை விட்டு ஆட்டுவாளாம். கிழவி பாவம்! பல வேளைகள் பட்டினியாகவே கிடப்பாளாம். அண்டை அயலார் வீடுகளில் மருமகளுக்குத் தெரியாமல் பயந்து பயந்து சாப்பிடுவாளாம். பெரமனையும் அவன் பொண்டாட்டி மதிப்பதில்லை. அம்மாவுடன் சேர்ந்து பலமுறை அவனும் அவளுடைய கொடுமைக்கு ஆளாகியிருக்கிறான். பொண்டாட்டியின் ஏச்சுகளையும், பேச்சுகளையும் அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ‘அம்மா எப்போது சாவுவாள்’ என்று அவள் சாவுக்காகக் காத்திருந்தான். ஒருநாள் கிழவிக்கு வயிறு உப்பியது போல் ஆனது. ஒன்றுக்குப் போக முடியாமல் திணறினாள். சோடா வாங்கி வந்து ஊற்றச்சொல்லி பக்கத்திலிருந்தவர்கள் சொன்னார்கள். சோடா வாங்கி வர கடைக்குப் போனான் பெரமன். அந்த நேரத்தில் கிழவியின் உயிர் போய்விட்டது. செய்தியைக் கேட்டு ஓடி வந்தான். அம்மாவின் முகத்தைக் கடைசியாய் ஒரு தடவைப் பார்த்தான். வெளியே வந்து வீட்டின் கோடிப்பக்கமாய் போனான். அதற்கு மேல் அவன் எங்கே போனானென்று யாரும் பார்க்கவில்லை. நேராக வடக்கே பிள்ளையார் கோயில் காடுவெட்டிக்குப் போனான். அந்த இடங்களில் எல்லாம் பனைமரங்கள் நெருக்கமாகவும் உயரமாகவும் இருந்தன. மிகவும் உயரமான பனையில் ஏறினான். பனையின் கொண்டலுக்கு ஏறியவன் தன்னுடைய வேட்டியை குறுக்கு மட்டையில் போட்டுக்கட்டி சுருக்குப் போட்டுக் கொண்டு தொங்கினான்” என்று ஆசிரியர் செல்லாயி வாயிலாக மருமகள் கொடுமையை எடுத்துக்காட்டியுள்ளார் (Tamilselvi, 2005).

மாமியார் - மருமகள் உறவு என்பது பெரும்பான்மையான குடும்பங்களில் சிக்கல் மிகுந்த உறவாகக் காணப்படுகின்றது. வீட்டிற்குள் மாமியார் கொடுமைகள் இன்றும் தொடரத்தான் செய்கின்றன. மாமியார் மருமகளைக் கொடுமைப்படுத்துவது ஒருபுறம் இருக்க, மருமகளால் மாமியாரும் துன்பமடைகின்றனர். ஒரு குடும்பத்தில் மாமனார் இறந்த பின் மாமியார் தனித்து விடப்படுகின்றார். அப்போது அவர்களுக்கு அரவணைப்புத் தேவைப்படுகின்றது. ஆனால் மருமகளால் மாமியார் கொடுமைப்படுத்தப்படுகிறாள். மாமியார் மருமகளைப் பெரும்பாலும் கொடுமைப்படுத்தினாலும், ஒரு சில மருமகள்களும் மாமியாரைக் கொடுமைப்படுத்துகின்றனர் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

## ஆய்வின் பயன்கள்

ஒரு மனிதன் தன் அடிப்படைத் தேவைகளைத் தானே நிறைவேற்றிக் கொள்ளுதல், தனித்து வாழும் துணிச்சல் போன்றவற்றைப் பெறும்போது தற்சார்பு உடையவனாகிறான். இத்தகைய தற்சார்புத் தகுதி ஆண்களுக்கு மட்டும் உண்டு. பெண்களுக்கு இல்லை என்பதாகச் சமூக மதிப்பீடுகள் உள்ளன. பெண்ணுக்குத் தன்னிலை உரிமை சார்ந்த செயல்கள் கேள்விக்கும், விமர்சனத்திற்கும் உள்ளனவையாக இருந்தன.

பெண்ணுக்குத் தன்னிலை உரிமை அவசியம். பெண்கள் பொருளாதாரத் தேவைகளின் பொருட்டுத் தனக்கென வேலைவாய்ப்பைப் பெறும்போது ஆணைப் போலச் சுய உரிமையைப் பெற முடியும். அதுவே அவளுக்குத் தற்சார்புத் தன்மையைத் தரும். அடிமைத்தளையில் இருந்து விடுதலையைத் தன்னிலை உரிமை தரும் என்பதை மஞ்சை வசந்தன் பின்வருமாறு கூறுகிறார்.

"பெண்கள் தங்கள் நிலையை உயர்த்திக் கொள்ளவும் அடிமை மற்றும் ஆதிக்கத் தளையிலிருந்து விடுபடவும், அவர்கள் தங்கள் நிலையை, தகுதியை, அறிவை, படிப்பை உயர்த்திக் கொள்ளவும் தற்சார்பு நிலையை அடைவது அவசியம். சார்ந்தே வாழ வேண்டும் என்ற நிலைதான் ஒருவரை மற்றொருவருக்கு அடிமையாக்குகிறது" (Manjai Vasanthan, 2002).

பெண்கள் சமுதாயத்தின் பிரச்சனைகளைக் கண்டு துவண்டு விடாமல் உறுதியாகத் துணிச்சலுடன், தன்னம்பிக்கையுடன் போராடினால் அவள் செல்ல நினைக்கும் உயரத்தை அடைந்து விடலாம் என்ற இப்புதின ஆசிரியரின் பெண்ணியச் சிந்தனைக்கு வலுச்சேர்ப்பதாக கவிஞர் வைரமுத்துவின் கவிதை வரிகள் அமைந்துள்ளன. உலகத்தில் போராட்டங்களுக்குள் வாழும் பெண்ணைப் பார்த்து வைரமுத்து,

"புரிந்துகொள்
சுடும் வரைக்கும்
நெருப்பு
சுற்றும் வரைக்கும்
பூமி
போராடும் வரைக்கும்
மனிதன்
நீ மனிதன்"

என்று பெண்ணிடம் விழிப்புணர்வைத் தூண்டுகிறார் (Vairamuthu, 2009).

## முடிவுரை

இவ்வாய்வில், பெண்மை குறித்து பல்வேறு அறிஞர்களின் கருத்துக்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. காலந்தோறும் பெண்ணை அடிமையாக்கும் கருத்துக்களும், பெண்ணடிமைக்கான காரணங்களும் விளக்கப்பட்டுள்ளன. சு. தமிழ்ச்செல்வி தன்னுடைய 'மாணிக்கம்' புதினத்தின் வாயிலாகப் பெண்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகளையும், கொடுமைகளையும், ஆணாதிக்கத் தந்திரங்களினால் அடிமைகளாக ஆக்கப்படுகின்ற நிலைகளையும் எடுத்தியம்பியுள்ளார். பெண்கள் தற்சார்புத் தன்மையை வளர்த்துக் கொண்டு, அதன் வாயிலாகத் தங்களுக்குள் இருக்கும் பொறுமை, நிதானம், சகிப்புத் தன்மை, களைப்பின்றி உழைத்தல் ஆகிய குணங்களுடன், துணிவுடனும், தன்னம்பிக்கையுடனும் செயல்பட்டால் சாதனை பெற முடியும் என்ற பெண்ணியச் சிந்தனையை வெளிப்படுத்துகிறார்.

## References

Bharathiar, (2008) Bharathiar Kavithakal, Sree Indhu Publications, Chennai, India.

Kalyanasundaram, T, V., (1970) Pennin Perumai, Thiruvarasu Putthaga Nilaiyam, Chennai, India.

Kulasekaran, S., (1984) Samuga Marumalarchi Pengal, Amirtham Pathippagam, Vellore, India.

Manjai Vasanthan, (2002) Pennaal Mudiyum, Karan Pathippagam, Neyveli, India.

Paramasivam, T, K., (1999) Kumaraguruparar Aaivu Maalai, Chennai, India.

Tamilselvi, S., (2005) Manikkam, New Century Book House, Chennai, India.

Vairamuthu, (2009) Vairamuthu Kavithaikal, Surya Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License